சிவில் சமூக நிதியம் (CSF) பொது வழிகாட்டல்கள்

நிகழ்ச்சித் திட்டத்தைப் பற்றி

சிறிய பணக் கொடைகளை வழங்கவதன் மூலம் குடிசார் தொடர்புகளுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளுக்கு சிவில் சமூக நிதியமானது ஆதரவு வழங்குகிறது. இந்தச்சிறிய பணக்கொடைகள் உலக வங்கியின் இலங்கைக்கான உள்நாட்டு அலுவலகத்தால் நிர்வகிக்கப்படுகின்றன.

பிரஜைகளுக்கு வலுவூட்டுகின்ற அத்துடன் அபிவிருத்தி விளைவுகளை அதிகரித்து அவற்றின் மீது செல்வாக்குச் செலத்துவதற்கான முன்முயற்சிகளை எடுப்பதற்கு உதவுகின்ற செயற்பாடுகளை சிவில் சமூக நிதியமானது ஆரம்பிப்பதுடன் அவற்றிற்கு ஆதரவும் வழங்குகிறது. உள்ளடக்கல், வகை பொறுப்பு பங்கேற்பு ஆகியவற்றிற்கான பொறிமுறைகளை இச் செயற்பாடுகள் பலப்படுத்துகின்றன. அரச துறை ஏனைய குடிசார் சமூக அமைப்புக்கள் மற்றும் தனியார்துறை ஆகியவற்றுடனான பங்குடமைகளையும் இச் செயற்பாடுகள் பலப்படுத்துகின்றன.

சிவில் சமூக அமைப்புக்களுக்கான வழிகாட்டல்கள்

<u>சிங்களம்/தமிழ்</u>

<u>நீங்கள் விண்ணப்பிக்க முன்னா</u>

<u>யார் விண்ணப்பிக்க முடியும் ?</u>

<u>எவ்வகையான செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கப்படுகிறது?</u>

<u>எவ்வகையான செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கப்படுவதில்லை?</u>

<u>பணக் கொடைகளுக்கான தெரிவு அளவு கோல்கள்?</u>

<u>எந்த அளவு பணக் கொடைகள் வழங்கப்படுகின்றன?</u>

<u>ஒரு பணக் கொடைக்கு விண்ணப்பிப்பது எவ்வாறு?</u>

<u>யாருடன் தொடர்பு கொள்வது?</u>

விண்ணப்பப் படிவங்களை இணையத்தளத்திலிருந்து இறக்கம் செய்யவும் - <u>ஆங்கிலம், தமிழ், சிங்களம்</u>

பெட்டி 1- குடிசார் விளைவுகளின் தொடர்புகளின் விளைவுகள்

குடிசார் தொடர்புகளால் பின்வருவனவற்றைச் செய்ய முடியும்

- அறிவுப்பகிர்வு வலையமைப்புக்களை உருவாக்குதல் பரிந்துணர்விற்கான பொது அடிப்படைகளைக் கட்டியெழுப்புதல் அரச தனியார் ஒத்துழைப்பிற்குத் தைரியமளித்துத் சில நேரங்களில் பதட்டத்தைத் தணித்தல் ஆகிய செயற்பாடுகளின் மூலம் சீர் திருத்தங்களிற்கும் தேசிய வறுமை ஒழிப்பிற்குமான

பொதுமக்கள் கருத் தொருமிப்பினையும் உள்ளூர் உடைமையையும் மற்றும் அபிவிருத்தி உபாயங்களையும் ஊக்குவித்தல்

- முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைப் பங்கீடுபாட்டாளர்களது குறிப்பாக வறிய மற்றும் ஓரங்கட்டப்பட்ட மக்களது மனக்குறைகளுக்குக் குரல் கொடுப்பதும் கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்ட தீர்மானங்களில் அவர்களது கருத்துக்கள் உள்ளடக்கப்படவதை உறுதி செய்தலும்
- உள்ளூர் அறிவினை வழங்குதல் சாத்தியமான ஆபத்துக்களை இனங்காணுதல் உதவிகளை இலக்குவைத்தல் பெற்றுக் கொள்ளும் எல்லையினைக் குறிப்பாக சன சமூக மட்டத்தில் விரிவு படத்துதல் ஆகிய செயற்பாடுகளின் மூலம் அபிவிருத்தித் திட்டங்களின் தாக்கங்களைப் பலப்படுத்துதலும் அவற்றின் மீது செல்வாக்குச் செலுத்துவதும்
- புத்தாக்கக் கருத்துக்களையும் உள்நாட்டு மட்டத்திலும் உலகளாவிய மட்டத்திலும் காணப்படும் அபிவிருத்திச் சவால்களுக்கான தீர்வினையும் கொண்டு வருதல்
- அபிவிருத்திச் செயற்பாடுகளின் பொதுமக்கள் தொடர்பான வெளிப்படைத்தன்மை வகை கூறும் தன்மை ஆகியவற்றை மேம் படுத்துவதன் மூலம் நல்லாட்சிக்கு உதவும் சூழலுக்குப் பங்களிப்புச் செய்தல்.

<u>நீங்கள் விண்ணப்பிக்க முன்னர்</u>

தனக்குக் கிடைக்கும் வேண்டுகோள்களில் ஒரு மிகச்சிறிய வீதத்திற்கே CSF இனால் நிதி வழங்கக் கூடியதாக இருக்கிறது. பல வேண்டுகோள்கள் நிராகரிக்கப்படுகின்றன. இதற்குக் காரணம் இவை தகுதி குறைந்தவை என்பதல்ல. மாறாக தெரிவு செய்யப்பட்ட பிரேரணைகள் பொருந்தும் அளவு நெருக்கமாக நடைமுறைக் குறிக்கோள்களுடன் அல்லது CSF இனுடைய அளவுகோள்களுடன் இவை பொருந்துவதில்லை என்பதே நிராகரிக்கப்படுவதற்கான காரணமாகும். உங்களுடைய செயற்பாடானது குறிக்கோள்களுடனும் அளவுகோல்களுடனும் பொருந்துவதாக இருக்கலாம். கோரிக்கையானது இருக்கின்ற நிதிகளைவிட மிகவும் அதிகமானதாக இருக்கின்றது.

விண்ணப்பிப்பதற்கு முன்னர் பொருத்தப்பாடு உள்ளதா என்பதை நிர்ணயித்துக் கொள்வதற்கு தயவு செய்து நேரத்தைச் செலவிட்டு வழிகாட்டல்களை வாசித்தக் கொள்ளவும்.

யாரால் விண்ணப்பிக்க முடியும்?

இலங்கையைத் தளமாகக் கொண்டு அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாகச் செயற்படும் சிவில் சமூக அமைப்புக்கள் பணக்கொடைக்கு விண்ணப்பிக்க முடியும்.

சிவில் சமூக அமைப்புக்கள் நற்பெயரைக் கொண்டிருக்க வேண்டும் அத்துடன் சமூகத்தில் சாதனைகள் புரிந்த வரலாற்றினையும் நிதி தொடர்பான நேர்மையையும் அவை கொண்டிருக்க வேண்டும்.

முந்திய வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களினால் ஆதரவளிக்கப்படாத அமைப்புக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (5 வருட காலப்பகுதியினுள் சிவில் சமூக நிதியதிதிலிருந்து மூன்றிற்கு மேற்பட்ட நன்கொடைகளைப் பெறுவதற்கு அமைப்புக்கள் தகுதியற்றவை)

எவ்வாறான செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கப்படுகிறது?

குடிசார் தொடர்புகளைப் பிரதான குறிக்கோளாகக் கொண்ட செயற்பாடுகளுக்கு குடிசார் சமூக நிதியம் ஆதரவு வழங்ககிறது.
இது தவிர

- குடிசார் திறன்களை உம்/அல்லது அறிவினை அதிகரிப்பதற்கான செயலமர்வுகள், கருத்தரங்குகள் கொள்கை வகுத்தல்கள் அல்லது பொதுச்சேவை வழங்கல்களின் மீது செல்வாக்கு செலுத்துவதற்கான பொருத்தமான தொடர்பாடல் பிரசாரங்கள் அல்லது குறித்த துறையின் ஆற்றலை கட்டி எழுப்புவதற்கான புத்தாக்க வலையமைப்பு முயற்சிகள் எள்பவற்றை உள்ளடக்குபவையாக ஆனால் அவற்றிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாதவையாக செயற்பாடுகள் அமையலாம்

- பணக்கொடை வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்தினுள் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்

- முந்திய வருடங்களில் நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து ஆதரவு பெறாத அமைப்புக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

எவ்வகையான செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கப்படுவதில்லை?

CSF இனால் பின்வருவனவற்றிற்கு நிதியளிக்க முடியாது

ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் முறைசார் கல்விசார் பயிற்சித்திட்டங்கள், தொழிற்படும் செயற்திட்டங்கள், அடிப்படை சேவை வழங்கல்கள் (உபகரணம் போன்ற) தற்போது செயற்பட்டு கொண்டிருக்கும் நிறுவன ரீதியான மையத்திட்டங்கள், புலமைப் பரிசில்கள், கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் தமக்காக விண்ணப்பிக்கும் தனி நபர்கள் அல்லது சட்ட ரீதியற்ற அமைப்புக்கள் ஆகியவற்றிற்கு CSF இனால் நிதி வழங்க முடியாது.

உத்தேச செயற்பாடுகள் வழைமையான உலக வங்கி உபகரணங்களுடன் போட்டி இடுபவையாகவோ அல்லது அவற்றிற்கு பிரதியீடாகவோ அமையக்கூடாது. செயற்பாடுகள் உலக வங்கியின் வழைமையான திட்டங்களிலிருந்து தெளிவாக வேறுபடுத்தப்படக்கூடியவையாக இருக்க வேண்டும்.

மேலுள்ள வகுதிகளின்கீழ் பொதுவாக தகுதியற்றவையாக அமையும் விடயங்களினதும் செயற்பாடுகளினதும் உதாரணங்களில் பின்வருவனவையும் அடங்கும்

- நேரடியான சேவை வினியோகம்;

- வைத்திய சாலை உபகரணம், செவிப்புலன் உதவி உபகரணம், நடப்பதில் சிரமத்தை எதிர்நோக்கும் ஊன்றுகோல்கள் போன்ற;

- கணனி உபகரணங்களும் கருவிகளும்;

- வாடகை பராமரிப்பு அல்லது பொது அலுவலக பாவனைப்பொருட்கள் போன்ற செலவுகள்;

- ஒரு முதன்மையான குடிசார்குறிக்கோள்கள் இருந்தாலே தவிர வியாபாரத்திறன்களை பயிற்றுவித்தல் வேலையற்றோர் HIV/AIDS ஆகியவை தொடர்பான செயலமர்புகள்;

- வங்கியின் செயற்றிட்டங்களில் ஆலோசர்களாக/ஊழியர்களாக பணிபுரிவதற்காக CSO களினுடைய ஆற்றலைக் கட்டியெழுப்புதல்;

- நீர், வெப்பம், உணவு ஆகியவற்றை வழங்கல் போன்ற அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்தல்;

- நூல் நிலயங்கள் அல்லது சுத்திகரிப்பு வசதிகள் போன்றவற்றை அமைத்துக் கொடுத்தல்;

- தொழில் உருவாக்கம் அல்லது வேலை வாய்ப்பு;
- நோய்த்தடுப்பு இயக்கங்கள்;

- உணவு உதவி;

- முழுநேரச்சம்பளங்கள் உதாரணமாக அரச சார்பற்ற நிறுவன பணிப்பாளர்களது சம்பளங்கள்;

- நீர் வழங்கும் தொகுதி கிணறு போன்ற உட்கட்ட அமைப்பு செயற்திட்டங்கள்;

பணக்கொடைகளுக்கான அளவு கோல்கள்

பின்பருபவை பிரதான தெரிவு அளவுகளாகும்.

பயன் உறுதித்தன்மை: குடிசார் செயற்பாடொன்றின் குறிக்கோள்களின் மீது பிரேயரணை கவனம் செலுத்துகின்றதா? குறிப்பாக கூறவதாயின் அபிவிருத்தி பெறுபேறுகளை அதிகரிக்கும் பொறுட்டும் அவற்றின் மீது செல்வாக்கு செலுத்தும் பொருட்டும் உள்ளடக்கல், வகைப்பொறுப்பு பங்கேற்பு ஆகியவற்றிற்கான கட்டமைப்புக்களை பலப்படுத்துவதற்கு அரசதுறையுடன் இடையீடுகளை ஏற்படுத்துவதன் மூலம் தனிப்பட்ட பிரஜைகளுக்கு அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட பிரஜைகள் குழுக்களுக்கு செயற்பாடானது ஆதரவளிக்கின்றதா?

சாத்திய வளம்; உத்தேச அணுகு முறை நடைமுறையானதா? கால வரையறையும் செலவுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகையும் போதுமானவையா?

ஓழங்கமைப்பு ஆற்றல்: செயற்திட்டத்திற்கு எத்தகைய திறன்களை அமைப்பின் பணியாளர்களும், சபையும் கொண்டு வருகின்றன? அவை செயற்திட்டத்தின் இலக்குகளுக்கு ஏற்புடையவையா? தற்பொழுது அவர்கள் பிரேரிப்பதை ஒத்த அதே பரிமாணத்தையும் அளவுத்திட்டத்தையும் கொண்ட முயற்சிகளில் அமைப்பு வெற்றியடைந்திருக்கிறதா?

அமைப்பின் நம்பகத்தன்மை: சமூகத்திற்குள்ளும் வெளியேயும் எத்தகைய நற்பெயரை குழு கொண்டிருக்கிறது?

முக்கியத்துவம்: செயற்திட்டம் முக்கியமானதா? சமூகத்துக்கு தேவையான நடவடிக்கையை அல்லது பணியை பிரேரணை தூண்டிவிடும் என்பதற்கு ஆதாரம் இருக்கின்றதா? செயற்திட்டமானது தான் உதவுவதற்கு உத்தேசிக்கின்ற சமூகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துமா அல்லது தான் கவனம் செலுத்துகின்ற பிரைச்சினைகளை தீர்க்குமா? நிதி பெறுவதற்கான உங்களது ஏனைய வாய்ப்புக்களை கருத்தில் கொண்டு பார்க்கும் பொழுது இந்த நேரத்தில் இதற்கு ஆதரவு அளிப்பது சரியானதா?.

சமநிலை: புவியியல், பால்நிலை போன்றவற்றின் அடிப்படையில் செயற்பாடுகளின் முதலீட்டில் சமநிலையை பேணுவதற்கு உலக வங்கியின் இலங்கை அலுவலகமானது தீர்மானிக்கக் கூடும்.

எந்தளவான பணக் கொடைகள் வழங்கப்படுகின்றன?

பணக் கொடைகள் ஆகக்கூடியது 9000 அமெரிக்க டொலர் வரை அமைந்துள்ளன. எந்த வொரு செயற்பாட்டிற்குமென ஒதுக்கப்பட்ட உத்தேச தொகையின் அரைப்பங்கிற்கு மேல் சிவில் சமூக நிலையமானது அரிதாகவே நிதியளிக்கின்றது. எனவே ஏனைய மூலங்களிலிருந்து மேலதிக பங்களிப்பினை பெற்று கொள்வது தொடர்பில் செல்வாக்கு செலுத்துவதற்கு தனது பணக்கொடைகள் உதவ வேண்டும் என உலக வங்கி கூடுதலாக விரும்புகிறது. ஏனய கொடையாளிகளிடமிருந்து சம அளவு நிதியை பெற்றுக் கொள்வதற்கு பணக் கொடை ஒன்று எவ்வாறு உதவக்கூடும் என்பதை விவரிக்கும்படி விண்ணப்பிக்கும் அமைப்புக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

பணக்கொடை ஒன்றிற்கு விண்ணப்பிப்பது எவ்வாறு?

பிரேரணை எழுதுவது தொடர்பான குறுகிய கற்கை நெறி.

ஆங்கிலம்/சிங்களம்/தமிழ்

சிவில் சமூக நிதியமானது உலக வங்கியின் இலங்கை அலுவலகத்தினால் நிர்வகிக்கப்படுகின்றது. விண்ணப்பக் கோரலும் தீர்மானங்களும் வருடத்துக்கு ஒரு முறை மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றன.

உலக வங்கியின் இலங்கை அலுவலகத்தினால் அமைக்கப்படும் CSF குழுவினாலேயே பணக் கொடைகள் வழங்கப்படுகின்றன. அளவுகோல்கள் நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு விண்ணப்பங்கள் கவனமாகச் சரிபார்க்கப்படுகின்றன. சகல பிரேரணைகளையும் சிவில் சமூக நிதியம் புரணமாகப் பரிசீலிக்கின்றது.

வழிகாட்டல்களும் சிவில் சமூக நிதியத்திற்கான விண்ணப்பப் படிவமும் ஆங்கிலம் சிங்களம் தமிழ் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்பட்ட பிரேரணைகளை எழுதுவது தொடர்பான குறுகிய கற்கை நெறி எனும் தலைப்பிலான சிறிய கையேடும்
73/5இ காலி வீதி கொழும்பு-3 இல் அமைந்துள்ள உலக வங்கியின் கொழும்புக் காரியாலயத்தின் வரவேற்புப் பீடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

யாருடன் தொடர்பு கொள்வது?

விண்ணப்பப் பிரதிகளை தபால் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் பெற்றுக் கொள்வதற்கு மேலுள்ள முகவரியையும் thilakasena@worldbank.org என்னும் மின்னஞசல் முகவரியையும் 5561318 எனும் தொலைபேசி இலக்கத்தையும் கொண்ட கரிமா திலகசேன அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

பங்குபற்றும் நாட்டு அலுவலகத்திற்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்குமுன்னர் அளவு கோல்களையும் விண்ணப்பப் படிவத்தையும் வாசிக்கும்படி விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனை தெரிவிக்கின்றோம்.

வருகின்ற மிகப் பெருந்தொகையான வேண்டுகோள்களைக் கருத்தில்கொண்டு பார்க்கின்ற பொழுது நிதி பெறுபவர்கள் உலகவங்கி அலுவலகத்திற்கு நேரடியாக வருவதும் தொலைபேசியில் அழைப்பு விடுப்பதும் விரும்பத்தக்கதல்ல.

CSOக்களுக்கான மேலதிக வளங்களை www.worldbank.lk எனும் உலகவங்கியின் இணையத்தளத்திலிருந்தும் உலக வங்கியின் கொழும்பு அலுவலகத்தின் இரண்டாம் மாடியிலுள்ள பொது தகவல் நிலையத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

wb299428
M:\Dilinika\CSF\Tamil\CSF09TamGenGLfinal.doc
01/26/2009 1:42:00 PM